09 10 2023 MONDAY 7 15 PM

வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியா - டான்சானியா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஆறு ஒப்பந்தங்கள் இன்று கையழுத்தாகின.
- சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள ஐந்து மாநிலங்களிலும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- தமிழகத்தில் மத்திய மீன்வளத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபாலா இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.
- பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் Claudia Goldin—க்கு அறிவிக்கப்பட்டுள்ளது
- Johor கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா — டான்சானியா இடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆறு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள டான்சானியா அதிபர் Samia Suluhu Hassan பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

விளையாட்டு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தங்கள் வகைசெய்யும்.

இதன்பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

டான்சானியாவுடனான நல்லுறவில் இந்நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

பாதுகாப்புத் துறையிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்த, இருநாடுகளும் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

தீவிரவாதம் வேரோடு அகற்றப்படும் என்பதில் இரு நாடுகளுக்கு இடையே ஒருமித்த கருத்து நிலவுவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

டான்சானியா அதிபர் பேசுகையில், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு தொடர்ந்து வலுவடைந்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உட்பட ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் செய்தியாளர்களிடம் தேர்தலுக்கான அட்டவணையை வெளியிட்டார்.

இதன்படி, ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல்கள், அடுத்த மாதம் 7ஆம் தேதி தொடங்கி, 30ஆம் தேதிவரை நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை டிசம்பர் மாதம் 3ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

சத்திஷ்கர் மாநிலத்தில் மட்டும் தேர்தல்கள் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 7 மற்றும் 17ஆம் தேதிகளில் நடைபெறும்.

மிஸோராம் சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் 7 ஆம் தேதியும், மத்தியப் பிரதேச சட்டப்பேரவை தேர்தல் 17ஆம் தேதியும், ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தல் 23ஆம் தேதியும், தெலங்கானா சட்டப்பேரவை தேர்தல் 30ஆம் தேதியும் நடைபெறும்.

இந்த ஐந்து மாநிலங்களிலும் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து, தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த சட்டப்பேரவை தேர்தல்களில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே, மத்தியப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலுக்கான மற்றொரு வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

57 பேர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அம்மாநில முதலமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌகான், Budhni சட்டப்பேரவை தொகுதியிலிருந்து மீண்டும் போட்டியிடுகிறார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தலுக்கான 41 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும் பிஜேபி வெளியிட்டுள்ளது.

இதேபோல், சத்திஷ்கர் சட்டப்பேரவை தேர்தலுக்கான 64 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும் அக்கட்சி வெளியிட்டுள்ளது.

இதன்படி, அம்மாநில முதலமைச்சர் திரு. ரமன் சிங், Rajnandgaon சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடுகிறார்.

\>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

முதல்கட்டமாக இத்தாலி செல்லும் அவர் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சருடன் பேச்சு நடத்துகிறார்.

இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் செல்லும் அவர் இது நாடுகளுக்கு இடையேயான, வருடாந்திர பாதுகாப்புத்துறை பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறார்.

இந்தப் பயணத்தின்போது, பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனும் திரு. ராஜ்நாத் சிங் கலந்துரையாடுகிறார்.

\>>>>>><<<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தி பயன்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், இஸ்ரேல் பிரச்சினை, கச்சா எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்றார்.

நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறினார்.

\>>>>>><<<<<<

பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் Claudia Goldin–க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் தொழிலாளர்களுக்கான வர்த்தகம் தொடர்பான பணிக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

>>>>>><<<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அறுபது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தியா 107 பதக்கங்களை வென்றிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஒவ்வொரு வீரரின் கடுமையான பயிற்சி மற்றும் பதக்கத்தை வெல்ல வேண்டும் என்ற உறுதி இந்த சாதனையை படைக்க வித்திட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மத்திய அரசு தொடர்ந்து மேம்படுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போட்டியில் 16 புதிய பிரிவுகளில் இந்தியா பதக்கங்களை வென்றிருப்பதாகவும் திரு. அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச கடல்சார் உச்சிமாநாடு தொடர்பான முன்னேற்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, கடல்வழி சரக்குப் போக்குவரத்து அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

கடல்சார் உச்சிமாநாட்டில் 40 நாடுகள் பங்கேற்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

300க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடு பெறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, 15 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த உச்சிமாநாடு மும்பையில் வரும் 17ஆம் தேதி தொடங்கி, 19ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக திரு. சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் மத்திய மீன்வளத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பர்ஷோத்தம் ரூபாலா இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை துறைமுக அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், மீன்வளம் மற்றும் கால்நடைத் துறை தொடர்பான திட்டங்களின் செயலாக்கம் குறித்து அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கடல் பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமல் போன மீனவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று கன்னியாகுமரியில் இந்த விபத்தில் காணமல் போன மீன்வர்களில், உயிரிழந்த இரண்டு பேரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

முதல்முறையாக, மீனவர்களை தேடும் பணியில், கடற்படையின் அதிநவீன கப்பல் பயன்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சிக்கிமில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. பி.எஸ். தமாங் இன்று பார்வையிட்டார்.

Sirwani க்கு உட்பட்ட பகுதிகளில் பாதிப்புகளை பார்வையிட்ட அவர், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதற்கான பணிகளுக்கு உயர் முன்னுரிமை வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்றும் ஆய்வு மேற்கொண்டது.

>>>>>><<<<<<

Johor கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Uttam Singh தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி வரும் 27ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 4ஆம் தேதிவரை மலேசியாவின் Johor-ல் நடைபெறுகிறது.

இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து உட்பட எட்டு அணிகள் இதில் பங்கேற்கின்றன.

>>>>>><<<<<<

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ayush Shetty வெண்கலப் பதக்கம் வென்றார்.

அமெரிக்காவில் நடைபெற்ற இப்போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஸ்காட்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சங்கர் முத்துசாமி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் டென்மார்க்கின் Mads Christophersen 21-14, 21-16 என்ற செட்கணக்கில் சங்கர் முத்துசாமியை வென்றார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், நியூஸிலாந்து எதிராக 323 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் நெதர்லாந்து சற்றுமுன்வரை 12 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு .52. ரன் எடுத்துள்ளது.

ஹைதராபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்த நியூஸிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 322 ரன் எடுத்தது.

>>>>>><<<<<<

உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Meghana Reddy Mareddy பட்டம் வென்றார்.

>>>>>>END<<<<<<